**அளவுக்கூறுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் நிதியம் - 2017**

---

அளவுக்கூறுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1995 இன் 35 ஆம் இலக்க அளவுக்கூறுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் அதிகாரச்சட்டத்தின் 35(5) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காட்டப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI - 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, அளவுக்கூறுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதனது நிதிசார் செயலாற்றலினையும் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

**இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் 07**

நியமத்தின் 14 ஆம் பிரிவின் பிரகாரம், ஏதேனும் சொத்துக்கள் நிறுவகத்திற்கு எதிர்கால பொருளாதார நலன்களினை பாய்ச்சக்கூடியவாறு காணப்பட்டால் மாத்திரம் சொத்தொன்றாக இனங்காணப்பட வேண்டியதுடன் நியமத்தின் 69 ஆம் பிரிவின் பிரகாரம், அது பயன்பாட்டிற்கு கிடைக்கக்கூடியதாகக் காணப்படுகின்ற போது மாத்திரம் சொத்தொன்று பெறுமானத்தேய்விடப்படும். ஆனால், மேற்குறிப்பட்டதற்கு முரணாக, மீளாய்வாண்டின் போது ரூபா 25,594,800 தொகையான நிலையான சொத்துக்களின் கொள்வனவுக்கு மேற்கொள்ளப்பட்ட செலுத்துகை, நிறுவகத்தினால் சொத்துக்கள் பெறப்பட்டிருக்காத போதிலும் கூட நிலையான சொத்துக்களாக கணக்கிடப்பட்டிருந்ததுடன் ரூபா 295,276 தொகையொன்று பெறுமானத்தேய்வாக கணக்கிடப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டு கொள்கைகள்

நிதியத்தின் சொத்துக்களின் பெறுமானத்தேய்வு கொள்கை குறைந்து செல்லும் மீதி முறை என வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது நேர்கோட்டு அடிப்படையில் சொத்துக்கள் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தது.

#### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டு வரை ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் தேறிய பெறுமதி ரூபா 885,796,317 தொகையாகக் காணப்பட்டதுடன் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் கிரயம் ரூபா 154,831,734 தொகை கூட்டாக இணைக்கப்பட்டிருந்ததுடன் மொத்தப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் சொத்துக்களின் கிரயமாக காட்டப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் ஆதனம், பொறி மற்றும் உபகரங்களின் துல்லியமான கிரயம் வெளிப்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2015 ஆம் ஆண்டு வரை நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வுக்கான சரிப்படுத்துதல் சொத்துக்கள் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஆரம்ப மீதிகள் பெறுமானத்தேய்வுக் கணக்குகளுக்கான ஏற்பாடுகளில் காட்டப்பட்டிருக்காததுடன் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான பெறுமானத்தேய்வு அந்தக் கணக்குகளின் மீதிகளாக மீதி கீழ் கொண்டுவரப்பட்டிருந்தது. ஆகையினால் 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான திரண்ட பெறுமானத்தேய்வை நிதிக்கூற்றுக்களில் இனங்காணமுடியாதிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது நிலையான சொத்துக்களின் கொள்வனவில் ரூபா 8,295,251 தொகையான பெறுமதி சேர் வரி செலுத்தப்பட்ட போதிலும், சொத்துக்கள் கணக்கிலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் பெறுமதி சேர் வரி கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டது. அதற்கமைய, ஆனால் வருடாந்த பெறுமானத்தேய்வு அந்த வரித் தொகையை உள்ளடக்கிய பெறுமதியின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டிருந்ததுடன் அந்த பெறுமானத்தேய்வுத் தொகை ரூபா 215,754 ஆகக் காணப்பட்டது.

(ஈ) ரூபா 1,525,865 செலவினங்கள் ஏற்பட்டதன் பின்னர் ரூபா 2,198,812 தொகையான கட்டிடங்களின் திருத்தங்களுக்கு கட்டிடங்கள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட முற்பணத்தில், ரூபா 672,947 மீதி தொகை மீளளிப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், இது நிதிக்கூற்றுக்களில் தீர்ப்பனவு செய்யப்படாத முற்பணங்களாக இதுவரை காட்டப்பட்டிருந்தது. ஆகையினால், இறுதி பற்றுச்சீட்டுக்களின் பிரகாரம் கட்டிடங்கள் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 633,279 தொகை பொறுப்பொன்றாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கணக்காய்விற்கான ஆவணங்களின்மை

மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 85,549,962 நிலையான சொத்துக்களுடன் தொடர்புடைய விபரமான பட்டியல்கள் அல்லது நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் குறிப்பு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

1995 இன் 35 ஆம் இலக்க அளவுக்கூறுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் அதிகாரச்சட்டத்தின் 20(1)(அ) மற்றும் 37 ஆம் பிரிவின் பிரகாரம் வியபாரத்தில் பயன்படுத்தப்படும் அனைத்து அளவீட்டு உபகரணங்களும் வருடாந்தம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த அனைத்து உபகரணங்களும் சரிபார்க்கப்பட்டிருந்தமையை உறுதிப்படுத்துவதற்கு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் தொழிற்பாடுகளினை முன்னைய ஆண்டிற்கான ரூபா 126,413,214 மிகைகளுடன் ஒப்பிடுகையில் ரூபா 129,971,134 மிகையொன்றை விளைவித்திருந்தமையினால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 3,557,920 முன்னேற்றமொன்றைச் சுட்டிக்காட்டுகின்றது. முத்திரையிடல் வருமானம் மற்றும் முதலீட்டு வருமானம் என்பன அதிகரித்தமை மேற்குறித்த முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொதியிடமுன் பொருட்களினை பரீட்சிப்பது திணைக்களத்தின் பிரதான செயற்திட்டமொன்றாகக் காணப்பட்டதுடன் அளவுக்கூறுகள் விஞ்ஞான சர்வதேச உடன்படிக்கைகளின் இணக்கப்பாட்டுடன், வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்வதற்கு முன்னர் பொதியிடமுன்னுள்ள பொருட்களின் எடை மற்றும் தொகுதி பரீட்சிக்கப்படல் வேண்டும். இது தொடர்பில் அளவுக்கூறுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் பொறுப்புடைய நிறுவனமாகக் காணப்படுகின்றதுடன் இந்த முறையின் மூலம் வாடிக்கையாளர்கள் நம்பும்படிச் செய்யப்படுகின்றனர். மீளாய்வாண்டின் போது பொதியிடமுன்னருள்ள 05 பொறிகளினை பரீட்சிப்பதன் மூலம் ரூபா 100,000 வருமான தொகையொன்றை உழைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டது. ஆனால், பொதியிடப்பட்ட வகை எதுவும் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டில் திறக்கப்பட்ட தேசிய அளவுக்கூறுகள் ஆய்வுகூடத்தின் நிர்மாணத்திற்கான செலுத்துகையினை இறுதியாக்குவதற்கு ரூபா 30,000,000 தொகையொன்று ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், 2017 ஆம் ஆண்டின் திகதி வரையிலும் தரப்படுத்தப்படாத “HPL” பலகைகளினை அகற்றுவதன் மூலம் புதிய தரப்படுத்தப்பட்ட “HPL” (High Pressure Laminated Boards) இனை பொருத்துவது பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால், ரூபா 36,864,698.82 தொகையான மொத்த பிடிகாசு 2018 இல் வங்கி பிணையொன்றின் அடிப்படையில் நிதி அமைச்சு செயலாளரின் பரிந்துரையின் அடிப்படையில் ஒப்பந்ததாரர்க்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

### 4.2 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

2015 திசெம்பர் 08 இல் ரூபா 768,000,000 கிரயத்தில் திறக்கப்பட்ட புதிய ஆய்வுகூட கட்டிடத்தின் உட்பகுதியில் மனித உடலுக்கு தீங்கு விளைவிக்கும் வாயு காரணமாக பயன்படுத்த முடியாதிருந்தது. 2016 ஆம் ஆண்டில் இந்த தீங்குவிளைவிக்கும் வாயு நிலைமையினை தவிர்ப்பதற்கு புதிய வளிப்பதனாக்கி முறைமையொன்றினை ஸ்தாபிப்பதற்கு திட்டமிடப்பட்ட போதிலும், நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கைகள் மற்றும் 2017 திசெம்பர் 31 வரையிலும் கட்டிடங்கள் விளைவற்று தொடர்ந்தும் காணப்பட்டமை காரணமாக திட்டமிடப்பட்டவாறு வேலைகளினை மேற்கொள்ள முடியாதிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

நிதியத்தின் தொழிற்பாடுகள் மீதான உள்ளகக் கணக்காய்வொன்று வர்த்தகம் மற்றும் கைத்தொழில் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவனால் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டின் போது அளவுக்கூறுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வாளர் பதவியினை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை காரணமாக நிதியத்திற்கான உள்ளகக் கணக்காய்வொன்று திணைக்களத்தினால் கூட மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5.2 பெறுகைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 மார்ச் 24 இன் 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வடிவத்தின் பிரகாரம், முன்னைய ஆண்டிலிருந்து தொடர்கின்ற பெறுகைகள் மற்றும் புதிய பெறுகைகளினை தனித்தனியாகக் காட்டுகின்ற பெறுகைத் திட்டம், தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெறுகைகளின் செயல்முன்னேற்றம், மீளாய்வாண்டில் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டவை, கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் திணைக்களத்தின் பதில் கடமை புரியும் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | தொடர்புடைய நாளேட்டு உறுதிச்சீட்டிற்கு நாளேட்டினை ஆதரவளிக்கும் ஆவணங்கள் இணைக்கப்படாமை. |
| (ஆ) வருமானம் மற்றும் செலவின கட்டுப்பாடு | வருமானம் மற்றும் செலவினத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களினை அடைவதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாமை. |
| (இ) சொத்துக்கள் முகாமைத்துவம் | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்படாமை. |